மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 09 புதன்கிழமை 25.09.2024 கதிர் 371



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# இலங்கையின் எதிர்காலத்தை பாதுகாக்க புதிய ஜனாதிபதியின் தலைமை உதவும்

## ஐ.எம்.எப். பணிப்பாளர் அநுரகுமரவுக்கு வாழ்த்து

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை நிலையான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை அடைய முடியும் என நம்புவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது செயற்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் உட்பட இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த இலக்குகளை அடைவதற்கு நிலையான பங்காளியாக தொடர்ந்து பணியாற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் எதிர்காலத்தைப் பாதுகாக்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமை உதவும் என கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நம்பிக்கை வெளியிட்டார்.





## அமைச்சர்கள்,அதிகாரிகளால் வாகனங்கள் மீள ஒப்படைப்பு

ஜனாதிபதியாக அநுரகுமார திசநாயக்க தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பல அரச வாகனங்கள் புதிய நிர்வாகத்திடம் திரும்ப வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அமைச்சு அதிகாரிகளே வாகனங்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

குறித்த அமைச்சு வளாகத்திலும், கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலக வளாகத்திலும் பல வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

புதிய ஆட்சியின் பின்னர் வாகனங்களை திருப்பி அனுப்புமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதை அடுத்து வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஒதுக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தெரிவித்துள்ளார்.

## வடமாகாண ஆளுநராக வேதநாயகம் நியமனம்



வடக்கு மாகாண ஆளுநராக யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி முன்னிலையில் அவர் இன்று பகல் ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்யது கொண்டுள்ளார்.

இதேவேளை சில அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக இவர் ஓய்வு பெறுவதற்கு 3 மாத காலம் இருந்தபோது தனது பதவியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

## மதுபான லைசன்ஸ் உடனடியாக ரத்து!

ரணில் ஆட்சியின் இறுதிக்காலகட்டத்தில் வழங்கப்பட்ட மதுபான விற்பனை லைசன்களை (அனுமதிபத்திரம்) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்ய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

## கிழக்கு மாகாண ஆளுநராக ரத்னசேகர நியமனம்



கிழக்கு மாகாண ஆளுநராக ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி பதவியேற்றதிலிருந்து 6

## பொதுத் தேர்தலில் ஆணை கிடைக்கும்

### சஜித் அதீத நம்பிக்கை



“நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் நான்தான். இது கட்சி எடுத்த ஒருமித்த முடிவு. இதில் எவ்வித மாற்றமும் வராது. நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஆளும் அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்குவார்கள்.” - என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்கின்றேன். பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றோம். ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே பயணம் தொடரும். முற்போக்கு சக்திகள் எம்முடன் கைகோர்க்கலாம்.” - என்றார்.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இந்திய உதவித் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ரூபா முப்பது இலட்சம் நன்கொடை!






இலங்கையின் வடக்கு - கிழக்கு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கல்விக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் இருந்தும் சுமார் 100 மாணவர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத் திட்டத்துக்கான ஷரூபா 30 இலட்சம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத்தூதுவர் ஸ்ரீ சாய்முரளி இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார்.

இந்தியத் தூதரகத்தின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதித் துணைத் தூதுவர் ஸ்ரீ கே. நாகராஜன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அதிகாரிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பயன்பெறும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

# தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் இன்று முதல்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் இன்று முதல் ஏற்கப்படுமென, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நேற்று நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான அதி விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 04 முதல் 11ஆம் திகதி நண்பகல் வரை, இதற்கான வேட்புமனுக்களை பெறுவதற்கான திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி என குறித்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன்புதிய பாராளுமன்றம்நவம்பர் 21ஆம் திகதி கூடுமெனவும் குறித்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 11 வயதுடைய கிளிநொச்சி மாணவனின் சாதனை பயணம் இன்று ஆரம்பமானது

*கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த முரளிதரன் டியோஜன் எனும் 11 வயதுடைய குறித்த மாணவன் இலங்கையை சுற்றி முழுமையாக நடை பயணம் ஒன்றினை இன்று ஆரம்பித்தார்.*

*புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடையாத நிலையில், சிறுவயதில் ஏதாவது ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டும் எனும் நோக்கில் குறித்த பயணம் இன்று ஆரம்பித்ததாக அவரது தந்தை குறிப்பிடுகிறார்.*

*இன்று காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக சமய நிகழ்வுகளுடன் ஆரம்பித்த பயணம் முல்லைத்தீவு நோக்கி ஆரம்பமானது.*

*குறித்த பயணத்தை குடும்ப உறுப்பினர்களும், சமயத்தலைவர்களும், பிரதேச மக்களுமாக இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.*

*குறித்த சிறுவனுடன் அவரது தந்தையும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ( 316)*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ரணிலுடன் சஜித் அணி இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்பே இல்லை

## திஸ்ஸ அத்தநாயக்க திட்டவட்டம்



ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு பாரிய இடையூறை ஏற்படுத்தியவர் ரணில் விக்கிரமசிங்க என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும்நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கரமசிங்கவுடன் இணைந்து அரசியலில் ஈடுபட எவ்வித வாய்ப்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவுக்கு இடையூறு விளைவிக்கவில்லை எனின் சுமார் 13 இலட்ச வாக்குகளை விட அதிகம் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வாய்ப்புகள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி மூலம் மாத்திரமே போட்டியிடுவதாகவும்அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவது மொட்டுக் கட்சியுடன் இணைவதற்கு சமம் என்பதால் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில்-சஜித் ஒன்றிணைவது தொடர்பில் பேசுவதற்கு கூட ஐக்கிய மக்கள் சக்தி விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பழைய நியாயங்களை மீண்டும் ஒருமுறை ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைக்க அழைப்பு விடுத்தாலும் அதனை ஏற்க தயாராக இல்லை என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

# தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் வாழ்த்திய பிரான்ஸ் ஜனாதிபதி



இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிற்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூலில்விசேட குறிப்பொன்றை பதிவிட்டுள்ள அவர் வாழ்த்துக் கூறியுள்ளார்.

இதில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் அவர் வாழ்த்து கூறியுள்ளார்.

அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“அன்புள்ள இலங்கை நண்பர்களே,

உங்கள்ஜனாதிபதி தேர்தல்சிறப்பாக நடைபெற்றதற்கு வாழ்த்துக்கள். இந்த தேர்தல், இலங்கையின்ஜனநாயகத்தின் வீரியத்தை பறைசாற்றுகின்றது.

அனுரா திசாநாயக்க, உங்கள் வெற்றிக்கு எம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!

இலங்கையுடன் இணைந்து செயல்படுவதற்கு பிரான்ஸ் தயாராக உள்ளது. நம்பிக்கையும், ஒத்துழைப்பும் நம் கூட்டுமுயற்சிகளுக்கு அடிக்கல்லாக அமையட்டும்” என்றுள்ளது.






# மிதி வெடி

புதிய ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் பதவியேற்பு – நாடாளுமன்ற கலைப்பு – அடுத்த தேர்தல் அறிவிப்பு எண்டு “சும்மா அதிருதில்ல” எண்ட கணக்கில நாட்டில எல்லாம் படுவேகமாக நடக்குது.

இங்காலக் கரையால தமிழ்த்தேசியம் பொங்கி வழியப் போகுது பாருங்கோ.. சும்மாவே மே 18 – முள்ளிவாய்க்கால் மானிடப் பேரிடர் நாள், செப்ரெம்பர் 26 – திலீபன் நினைவேந்தல், நவம்பர் 27 – மாவீரர் தினம் எண்டு கனத்த நாளுகளில சன்னதம் கொள்ளுற எங்கட ஆக்கள். இந்தக் கிழமை முழுசா “தமிழ்த் தேசியச் சாயம்” பூசிக் கொள்ளுவினம். அதிலும் விசேசமா நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரத்தில சும்மா இருப்பினமே?

எங்களுக்காக தங்களைத் தியாகம் செய்த உத்தமர்களை நினைவு கூருற நேரத்திலேயே ஒற்றுமையா நிக்கேலாமல் அங்கால ஒரு கொட்டில், இங்கால ஒரு கொட்டில் எண்டு குந்திக் கொண்டிருக்கிறவை, எங்களுக்கு நாடு பிடிச்சுத் தரப்போகினம்..?

விடுங்கோ. திரும்பத் திரும்ப கதைச்சு ஆகப்போறது ஒண்டுமில்லை.

ஆள் தான் மாறிச்சுதே தவிர, அரியதரம் மாறினதா இல்லைப் பாருங்கோ. ஆட்சி மாறேக்க அடிப்பொடியளையும் மாத்திறது தானே? ஆனா நல்லதா ஏதும் நடந்ததா இல்லை. பாக்கப்போனா அண்ணனும், தம்பியும் தானுங்கோ..

அதானுங்கோ. மாநகரத்தில ஆணையிட்டுக் கொண்டிருந்த ஒருத்தர் ஏழு வருசமா, ஆறு தரத்துக்கு மேல வந்த இடமாற்றத்தை நிப்பாட்டிப் போட்டு “பாட்டும் நானே. பாவமும் நானே” எண்டு பாடிக் கொண்டிருந்தவரெல்லோ. எல்லாத்துக்குள்ளயும் “நான்” எண்டு சொல்லி மாநகரத்துக்குள்ள வாற “லைப்ரரி”, “எம்.ஓ.எச்” எண்டு எல்லாத்துக்கயும் தலைய ஓட்டிக் கொண்டிருந்தவர். ஒருத்தரையும் சுயாதீனமா இயங்க விடேல்ல : தானும் இயங்கேல்ல “பேஃஸ்”புத்தகத்தில படம் போட்டது தான் மிச்சம்.

வரி கட்டுற சனத்துக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளைக் கூட செய்து குடுக்கேல்ல மாநகரமே நாறிப் போய் கிடக்க “நீரோ மன்னன் பிடில்” வாசிச்சது போல “பேஃஸ்”புத்தகத்தில படம் போடுறது தான் வேலை.

மாநகர சபையின்ர ஆளுகைக்குக் கீழ இருக்கிற “ப்பளிக் லைப்ரரி” ஐப் பொது மக்கள் பாவிக்கிறதெண்டா கடும் சட்ட திட்டம். தென்னாசியாவிலேயே மிகப் பெரிய அறிவுப் பொக்கிசம் எண்டு பெயரெடுத்த – எங்கட சொத்தை நாங்கள் பாவிக்கிற-துக்கு கடும் கெடுபிடி. அங்க அதிகாரத்தில இருக்கிற அம்மணிக்கு முதுகெலும்பு “மிஸ்ஸிங்”. எதுக்கெடுத்தாலும் “கொமிஷன் அவர்” ட்டைத் தான் கேக்கோணும் எண்டு நிப்பார்.

இப்ப புது ஆணையிடுறவர் பதவிக்கு வந்தாப் பிறகு ஒவ்வொரு “செக்ஷனையும்” சுயாதீனமா இயங்க விடுறாராம் எண்டு கேள்விப்பட்ட உடன, சரி ஒருக்கா “ப்பளிக் லைப்ரரி”க்குப் பேரப்பிள்ளையக் கூட்டிக் கொண்டு போவமெண்டு போனன்.

அங்க ஒண்டும் மாறினதா இல்லைப் பாருங்கோ. வழக்கம் போலவே வாசலில கட்டி நிண்டவை “குலைக்கத்” தவறேல்லை ஆடு, மாட்டை மேச்ச மாதிரி ஏக வசனத்தில கதை பேச்சு..

அவர் இருக்கேக்க கழிப்பறையள் எல்லாம் சிதைஞ்சு சின்னா பின்னமாப் போய்க் கிடந்தது. எத்தின தரம் எப்பிடிச் சொன்னாலும் திருத்துப்படாததால பாவிக்க ஏலாமல் கிடந்தது.

இவர் ஆணையிட வந்த பிறகு எல்லாம் திருத்துப்பட்டுட்டு ஆனாலும் பொது மக்கள் பாவிக்க முடியாமல் பூட்டுப்பட்டுக் கிடக்கு. கேட்டால் அது அப்பிடித் தானாம் எண்டு அங்க நிக்கிறவை சொல்லினம்.

வயசான நேரத்தில . வருத்தம் வேற அடிக்கடி போய்வர வேண்டி இருக்கும். பேரப்பிள்ளையப் பேப்பர் வாசிக்கிற இடத்தில இருத்திப்போட்டு ஒருக்கா “ஒண்டுக்கு” போயிற்று வருவமெண்டு போனன். ஆப்பிளையள் போற இடம் திறந்து கிடந்துச்சு. நான் உள்ள போய் நிக்கிற நேரமாப் பாத்து அஞ்சாறு பொம்பிளையள் அடிச்சுப் பி-டிச்சுக்கொண்டு “ஆம்பிளை ரொயிலற்”றுக்குள்ள வருகினம். நானும் அரைவாசியில நிப்பாட்டிப்போட்டு வந்து. “இது ஆம்பிளையளுக்குரியது. பொம்பிளையள் அங்கால போங்கோ” எண்டன். அவசரம் – அத்தரத்தில வந்ததுகள் “நீர் உம்மட வேலையப் பாரும் ஓய்” எண்டு பேசிப் போட்டு போய் ஆசுவாசமாத் தங்கட அலுவலப் பாத்துப் போட்டு போச்சுதுகள்.

எனக்கு இன்னும் அந்த “ரென்சன்” போகேல்ல பாருங்கோ. உப்பிடி எங்களுக்கு ஒரு அந்தரம் ஆபத்தெண்டு பொம்பிளையள் போற இடத்துக்குள்ள நாங்கள் பூந்திருந்தால்.. நிலைமை என்னவாகி இருக்கும்? கொஞ்சம் யோசிச்சுப் பாருங்-கோ. “வயசு போன நேரத்தில கிழவன் என்ன வேலை பாக்குது” எண்டு சப்பித் துப் பியிருப்பினம்.

நானும் விடேல்ல பாருங்கோ. நேராப் போனன். அங்க நிண்ட “ஆபிஸர்” மாரிட்டை. இதென்ன ஆம்பிளை – பொம்பிளை எண்டு எழுதிப் போட்டுக் கிடக்கு, ஆனா பூட்டிக் கிடக்கு?” எண்டன். அங்க நிண்டவா ஒருத்தி சொன்னா “ஓம் ஐயா அது நாங்கள் பாவிக்கிறதுக்காகத் தான் பூட்டி வைச்சிருக்கிறம். திறந்து விட்டாக் கண்டவையும் போய் வர எங்களுக்கு அசிங்கமாக் கிடக்குது” எண்டு.

நானும் விடேல்ல பாருங்கோ “அப்ப ஏன் அம்மா ஆண் – பெண் எண்டு தனித்தனியா போட்டுருக்கிறியள்? “யுனி செக்ஸ்” அதானுங்கோ இருபாலார் கழி-ப்பறை எண்டு போடுங்கோவன். அப்பிடிப் போட்டுட்டு உங்கட “வசந்த மாளிகைய” பக்குவமா அசிங்கப்படுத்தாமல் பாத்துக் கொள்ளலாம்” எண்டன்.

அந்த அம்மணி சூடாகிற்றார். ஐயா எதெண்டாலும் எங்களுக்கு உங்களோட கதை தேவையில்ல.. இது “கொமிஷனரின்ர ஓடர்” அங்க போய்க் கேழுங்கோ. “ எண்டா.

அப்பப் பாத்தியளோ. ஆள் மாறினதே தவிர அங்கயொண்டும் மாறேல்ல.

பொது நூலகத்தில வாற போற பொதுமக்கள் பாவிக்கிறதுக்கெண்டு இருக்கிற பொதுக் கழிப்பறையப் பூட்டி வைச்சுக் கொண்டு பொது மகனுக்குச் சொல்லுற பதிலப் பாத்தியளோ?

உங்களுக்கெண்டு ஒரு இடத்தை ஒதுக்குங்கோ அதில பிழை இல்ல, ஆனா பொது மக்களுக்கு வசதி செய்து குடுக்க வேண்டியது ஆற்ர பொறுப்புப் பாருங்கோ? அதை விட பாவிக்கப் பாவிக்க அடிக்கடி சுத்தப்படுத்துற வேலையப் பாருங்கோவன். பாவிச்சா பழுதாப் போயிடுமெண்டா. எங்க கொண்டு போய்த் தலைய முட்டுறெ-தண்டு தெரியாமல் கிடக்குது

ஆக மொத்தத்தில. மோதகம் இல்லாட்டி கொழுக்கட்டை தான்..

நரமுனி

# குடும்ப அரசியல் பின்னணி இன்றி

# பிரதமரான முதலாவது பெண்மணி



தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய நேற்று பிற்பகல் இலங்கையின் புதிய பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதற்குமுன் இலங்கையின் பெண் பிரதமர்களாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தொடர்ந்து மூன்றாவது பெண் பிரதமரானார் ஹரிணி அமரசூரிய.

மற்ற இரண்டு பிரதமர்களைப் போல் இல்லாமல், குடும்ப அரசியல் பின்னணி ஏதும் இன்றி ஹரிணி பிரதமர் ஆனது எப்படி?

1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6-ஆம் தேதி கொழும்பில் பிறந்தார் ஹரிணி. இரண்டு உடன்பிறந்தவர்கள் அவருக்கு உள்ளனர்.

கொழும்பு பிஷப் கல்லூரியில் அடிப்படைக் கல்வியை முடித்த அவர் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றார்.

டெல்லி பல்கலைக்கழகத்தில் சமூகவியல் இளங்கலைப் பட்டம் முடித்தார். அதன்பின் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள மெக்குவாரி பல்கலைக்கழகத்தில் பயன்பாட்டு மானுடவியல் மற்றும் மேம்பாட்டுப் படிப்புகளில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

2011-இல், எடின்பர்க் மற்றும் குயின் மார்கரெட் பல்கலைக்கழகங்களில் சமூக மானுடவியல், சர்வதேசச் சுகாதாரம் மற்றும்மேம்பாட்டு ஆய்வுகளில்முனைவர் பட்டம் பெற்றார்.

கடந்த 10 ஆண்டுகளாக, ஹரிணி அமரசூரிய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றினார்.

பல்கலைக்கழக நிர்வாகத்திலும் ஈடுபட்ட அவர், 2016 முதல் பல்கலைக்கழக மானியக் குழுவின் பாலினச் சமத்துவம் மற்றும் சமத்துவம் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறார்.

அவர் சமூக நலம், எய்ட்ஸ் விழிப்புணர்வு, மற்றும் குழந்தைகள் நலன் ஆகிய துறைகளிலும் ஆர்வலராக இருந்துள்ளார்.

மேலும், அவர் இலங்கையில் உள்ள சமூக சுகாதார அமைப்பான நேளவ-இன் இயக்குநராகவும், தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இலங்கையில் பெண்கள் மற்றும் பாலினம் குறித்த ஆராய்ச்சி நிறுவனமான CENWOR-இல் பதவி வகித்துள்ளார்.

ஹரிணி,லோ ரூ சொசைட்டி டிரஸ்டின் இயக்குநர்கள் குழுவில் உறுப்பினராகவும் இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினரான பிறகு அந்தப் பதவியை ராஜினாமா செய்தார்.

ஹரிணி, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் திறந்தநிலைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பல்கலைக்கழக ஆசிரியர் சங் கத்தின் உதவிச் செயலாளராகவும், 2016-இல் அச் சங்கத் தின் செய லா ளராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர், 2011-ஆம் ஆண்டு மொத்த உள் நாட்டு உற் பத்தி யில் 6% கல்விக்கு ஒதுக் கக் கோரி பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அதுமட்டுமின்றி, சமீபகாலமாக இலவசக் கல்வி தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் தலைமையில் பல போராட்டங்களிலும் ஈடுபட்டார்.

ஹரிணி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், தேசிய மக்கள் சக்தியின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மேலும், 2020 பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரானார். அன்று முதல் அந்தப் பதவியில் பணியாற்றி வருகிறார்.

நாடாளுமன்றத்தில் அவர் வகித்த பதவிகள் பின்வருமாறு:

O இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் மகளிர் மன்றம்

இலங்கையில்பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தி, பாலினச்சமத்துவம் மற்றும்சமத்துவத்தை ஆராய்வதற்கும்அதன்பரிந்துரைகளை நாடாளுமன்றத்திற்கு அறிக்கையாக சமர்பிக்கும் நாடாளுமன்ற சிறப்புக் குழு

O சர்வதேச உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வைக் குழு

O இலங்கையில் சிறார் போஷாக்குக் குறைபாடு அதிகரித்துள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக நாடாளுமன்ற விசேஷ குழுவினால் மேற்கொள்ளப்பட வுள்ள குறுகிய கால, நடுத்தர கால, மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, விரைவாக நடைமுறைப் படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் குழந்தைகள், பெண்கள், மற்றும் பாலினம் மீதான துறைசார் கண்காணிப்புக் குழு

O விலங்குகள் நலம் தொடர்பான நாடாளுமன்றக் கணக்குக் குழு

O நெறிமுறைகள் மற்றும் சலுகைகளுக்கான குழு

O கல்விக்கான அமைச்சர்களின் ஆலோசனைக் குழு

'manthri.lk' என்ற இணையதளம் வெளியிட்ட இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தரவரிசையின்படி, அவர் 225 எம்.பி-க்களில் 65-வது இடத்தைப் பிடித்துள்ளதுடன், 14 தலைப்புகளில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவற்றில், அவர் பெரும்பாலும் கல்வி, உரிமைகள், பிரதிநிதித்துவம், சுகாதாரம், பொருளாதாரம், மற்றும் நிதி தொடர்பான தலைப்புகளில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அநுர குமார திஸாநாயக்கவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையின் போது முனைவர் ஹரிணி அமரசூரியவின் பங்கு தனித்து தெரிந்தது. தேர்தலுக்கு முன்பு அவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் மாநாடு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முதல் நாள் ஹரிணி தன்னுடைய முகநூல் பக்கத்தில் தேர்தல் பணிகளுக்காக நாடு முழுவதும் 21500 கி.மீ பயணத்தை மேற்கொண்டதாக குறிப்பிட்டிருந்தார்.

"எங்கள் தேர்தல் பரப்புரையின் போது, நான் 21,500 கிலோமீட்டருக்கு மேல் பயணம் செய்தேன். நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பேசியிருப்பேன். ஆயிரக்கணக்கான மக்களை சந்தித்திருப்பேன். என்னுடைய வாழ்நாளில் மிகவும் மகிழ்ச்சியான அதே நேரத்தில் அதிகம் சோர்வடைய வைத்த காலகட்டம் அது" என்று முகநூல் பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார்.

உலகின் முதல் பெண் பிரதமர் இலங்கையில் தேர்வு செய்யப்பட்டவரே. இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்ட பிறகு அவருடைய மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக பொறுப்பேற்றார்.

அவரை தொடர்ந்து அவரின் மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் பொறுப்பேற்றார். அதே ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு காணாத வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்த இரண்டு பெண்களும் ஒரே குடும்பத்தில் இருந்து வந்தவர்கள். ஏற்கனவே பிரதமர் பொறுப்பு வகித்து வந்த தங்களின் கணவர்கள், தந்தைகள் இறந்த பின்னரே அந்த பொறுப்பிற்கு வந்தனர்.

இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் என்று தெற்காசியா முழுவதும் இது போன்ற நிகழ்வுகளை காண இயலும். இந்த நாடுகளில் உருவான பெண் தலைமைகள் அனைவரும் அரசியல் பின்னணியை கொண்ட குடும்பங்களில் இருந்து அரசியலுக்கு வந்தவர்கள்.

ஆனால் ஹரிணியை பொறுத்தமட்டில் இவர் ஒருவர் தெற்காசியாவிலேயே எந்த ஒரு அரசியல் குடும்ப பின்னணி ஏதுமின்றி பிரதமர் ஆன முதல் பெண்ணாவார்.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழுவின் உறுப்பினரும் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் தலைவியுமான சரோஜா சாவித்திரி பால்ராஜ், ஹரிணி குறித்து தனது நினைவுகளைபகிர்ந்துகொண்டார்.

"2018-இல் ஹரிணி, நான் உள்ளிட்டோர் இணைந்து முற்போக்கு பெண்களின் அமைப்பு ஒன்றை உருவாக்கினோம். அந்த அமைப்பில் பல காலம் ஒன்றாக நாங்கள் வேலை பார்த்தோம். ஹரிணியைப் பொறுத்தவரை சமத்துவத்தை விரும்புகிற, எல்லோருக்கும் சமவாய்ப்பை வழங்கக்கூடியவராகவே இருந்தார்.

இலங்கை எல்லாக்கலாச்சாரங்களையும் மதிக்கின்ற இன, மத பேதமற்ற ஒரு நாடாக வரவேண்டும் என்கிற முற்போக்கு சிந்தனை உடையவர் அவர். வீட்டுப் பணிப் பெண்களில் இருந்து நிர்வாகப் பணிகளில் இருக்கும் பெண்கள் வரை எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார். இல்லதரசிகளின் உழைப்பையும் மதிக்கும் சமுதாயமாக, இலங்கை வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்" என்றார்.

மேலும் பேசிய அவர், "இலங்கையைப் பொறுத்தவரை, 100-க்கு 52% பேர் பெண்கள். வாக்காளர்களில் 56% பேர் பெண்கள். இருந்தபோதும் இலங்கையில் அவர்களை வரிசையில் நிற்கவைத்து, வாக்குகளைப் பெற்றார்களே தவிர, பெண்கள் தங்களுடைய அறிவு சார்ந்து, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று யாரும் நினைக்கவில்லை. அந்த உணர்வை ஊட்ட, நாங்கள் பணியாற்றும்போது, அதற்கு பின்புலமாக நின்று உழைத்தவர் ஹரிணி," என்கிறார்.

வரிசையில் நிற்கவைத்து, வாக்குகளைப் பெற்றார்களே தவிர, பெண்கள் தங்களுடைய அறிவு சார்ந்து, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

(6ஆம் பக்கம் பார்க்க...)

# பொதுத் தேர்தலில் பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தியால் பெற முடியுமா?



இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற மறுநாளே இதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கை பிரதமராக தன்னுடைய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவை நேற்று தான் அவர் பிரதமராக அறிவித்திருந்தார். நேற்று செவ்வாய் கிழமை பிற்பகல் இலங்கையின் புதிய பிரதமராக அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு, நாடாளுமன்றத்தில் மூன்று இடங்கள் மாத்திரமே காணப்பட்டதால் புதிய சட்டங்களை இயற்றுவதில் சிக்கல் இருந்தது.

இத்தகைய சூழலில் புதிய ஜனாதிபதி அடுத்து என்ன செய்ய போகின்றார் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்த சூழலில், நாடாளுமன்றத்தை கலைக்கும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதற்கு டன், நாடாளுமன்ற தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேட்புமனு தாக்கல் அக்டோபர் 4-ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 11-ஆம் தேதி வரை நடைபெறும்.

வாக்குப்பதிவு நவம்பர் 14-ஆம் தேதி நடத்தப்படும். தேர்தலுக்குப் பிறகு புதிய நாடாளுமன்றம் நவம்பர் 21-ஆம் தேதி கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 225. இவர்களில் 196 மக்கள் பிரதிநிதிகள் மக்கள் ஆணை ஊடாகவும், 29 பிரதிநிதிகள் தேசிய பட்டியல் ஊடாகவும் தெரிவுசெய்யப்படுவது வழமையானது. ஆட்சியிலுள்ள கட்சியொன்று ஆகக்குறைந்தது 113 உறுப்பினர்களைத் தன்வசப்படுத்த வேண்டும். அப்படியென்றால்தான், ஆட்சியை சுமூகமாக நடத்திச் செல்ல முடியும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் இதுவரை இல்லாதளவு சவால் மிகுந்த ஆட்சியாகவே இந்த ஆட்சி காணப்படுகின்றது என மூத்த நாடாளுமன்ற செய்தியாளர் ஆர்.யசி தெரிவிக்கின்றார்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றி கொள்ள முடியுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், "வெல்ல வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு உண்டு. தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் கூட்டணி சேராதுள்ள ஒரே கட்சி இந்தக் கட்சி மாத்திரம் தான். இனிவரும் காலத்திலும் தாம் யாருடன் இணைந்து கூட்டணியாக போட்டியிட போவதில்லை என இவர்கள் அறிவித்துள்ளார்கள்," என்கிறார்.

"என்னவாக இருந்தாலும் 113 ஆசனங்களை இவர்கள் நாடாளுமன்றத்தில் கைப்பற்ற வேண்டும். ஜனாதிபதியொருவர் வெற்றி பெற்றதன் பின்னர் அவரைச் சூழ்ந்த அரசாங்கங்கள் அமைவது தான் வழக்கமாக இருந்தது. 57 லட்சம் வாக்குகளை அநுர குமார திஸாநாயக்க பெற்றதைப் போன்று, நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையைப் பெற வாய்ப்புகளை ஏற்படுத்த முயற்சிப்பார்கள். ஆனால் அந்தளவு வாக்குகளை எடுப்பது நிச்சயமாக சவாலாகவே இருக்கும். அப்படியென்றால், ஒரு கட்சியுடன் கூட்டணி சேர வேண்டிய கட்டாயம் வரும்," என யசி குறிப்பிடுகின்றார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை சேர்ந்த மற்றும் சிங்கள அரசியல்வாதிகளை ஒன்றிணைத்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற பெரும்பான்மையை கைப்பற்ற முயற்சிக்கும் என்றும் அவர் கூறுகின்றார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# இலங்கையின் புதிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மதிமுக பொதுச் செயலர் வைகோ

தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்ட இலங்கையின் புதிய அரசுக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறபோது, இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளாவதும், படகு உள்ளிட்ட மீன்பிடிக் கருவிகளைப் பறிமுதல் செய்வதும் தொடர் நிகழ்வுகளாகிவிட்டன.

பூம்புகாரைச் சேர்ந்த 37 மீனவர்களை செப்டம்பர் 21-இல் கைது செய்துள்ள இலங்கைக் கடற்படை, அவர்களது மீன்பிடிப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. மீனவர்களுக்கு அதிக அளவில் அபராதமும் விதித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படை கைது செய்வதும், மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமை ஆக்குவதும் இலங்கை மீன்பிடி தடைச் சட்டத்தின்படி கடுமையாக அபராதம் விதிப்பதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என மதிமுக பொதுச்செயலர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கு ரயில் சேவை விரைவில் ஆரம்பமாகுமா?

வடக்கு ரயில் மார்க்கத்தில் ரயில்களை இயக்குவது தொடர்பாக அமைச்சர் மற்றும் செயலாளருடன் கலந்துரையாடியதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவ மற்றும் அனுராதபுரத்திற்கு இடையிலான ரயில் மார்க்க பகுதி நவீனமயமாக்கல் காரணமாக மூடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தல் காரணமாக தேர்தல் கடமைகளுக்காக வரும் உத்தியோகத்தர்களுக்கும் கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அந்த மார்க்கம் மீண்டும் திறக்கப்பட்டது.

அதன்படி கடந்த 19, 20, 21, 22 ஆகிய தினங்களில் கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை பல விசேட ரயில் சேவைகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், குறித்த மார்க்கத்தில் வழமையாக ரயில் சேவைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் மார்க்கத்தின் சமிக்சை அமைப்பை நவீனப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் அதற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படாததே இதற்குக் காரணம் என ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மஹவயில் இருந்து அனுராதபுரம் வரை 47 ரயில்வே கடவைகள் உள்ளதுடன், 15 ரயில்வே கடவைகள் பிரதான வீதிகளுக்கு குறுக்கே அமைந்துள்ளன. அவற்றில் 09 ரயில்வே கடவைகள் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் உள்ள பிரதான வீதிகளை கடக்கின்றன. பிரதான வீதிகளின் குறுக்கே அமைந்துள்ள ரயில்வே கடவுப்பாதைகளில் ரயில் அந்த வழித்தடத்தில் இயங்கத் தொடங்கினால் பாதுகாப்பு கடவைகளை இயக்குவதற்கு பணியாளர்களை நியமிக்க வேண்டும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய ரயில்வே கடவைகளுக்கு எச்சரிக்கை பலகைகளை நிறுவ வேண்டிய தேவையுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக ரயில்வே சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும், மஹவ மற்றும் அனுராதபுரத்திற்கு இடையிலான 22 தினசரி ரயில் சேவைகளையும் முன்னெடுக்க முடியாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சமிக்சை அமைப்பு நவீனமயப்படுத்தி மீண்டும்ரயில்சேவைகளை ஆரம்பிக்க 4 மாதங்களுக்கும் மேலாகும் என ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்







# குடும்ப அரசியல் பின்னணி இன்றி

என்று யாரும் நினைக்கவில்லை. அந்த உணர்வை ஊட்ட, நாங்கள் பணியாற்றும்போது, அதற்கு பின்புலமாக நின்று உழைத்தவர் ஹரிணி," என்கிறார்.

"ஹரிணியைப் பொறுத்தவரை நிறைய பொறுமை உடையவர். தூரநோக்குடன் செயல்படும் சிந்தனை உடையவர். அவரது பேச்சுத் திறன், ஆங்கிலத்தின் மீது அவருக்கு உள்ள ஆளுமை, வெளிநாட்டு இலங் கையரையும் ஈர்க்கும் சக்தி ஆகியவை குறிப்பிட்டு சொல்ல வேண்டியவை.

ஹரிணி வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் எளிமையான வாழ்க்கை முறையைக் கொண்டவர். எந்த சந்தர்ப்பத்தையும் சமாளிக்கக்கூடியவர். ஏற்றத்தாழ்வின்றி எல்லா தரப்பினரோடும் இணைந்து செயல்படும் பண்பும் உடையவர்" என்றார்.

மேலும், "ஒரு அணியாகச் செயல்படும்போது எல்லோருக்கும் சமமான பங்களிப்பை வழங்குவார். மிகுந்த அர்ப்பணிப்புடன் தீவிரமாக செயல்படுவதால், எந்த ஒரு அணியிலும் ஹரிணிக்கு தானாகவே தலைமைத்துவம் கிடைத்துவிடும்.

ஏனென்றால், மிகுந்த ஜனநாயக ரீதியாக அணிக்குள் வேலைபார்ப்பார். ஆதிக்கம் கொண்ட தலைமைத்துவத்தைவிட, ஜனநாயக ரீதியான தலைமைத்துவத்தைக் கொண்டவர். அதை பலரும் விரும்புவார்கள். ஆகவேதான் எந்த ஒரு அணியிலும் அவருக்கு தலைமைத்துவம் கிடைக்கிறது," என்கிறார் சரோஜா சாவித்திரி பால்ராஜ். பி.பி.சி.

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகிவரும் நிலையில் தற்போது புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் பதவி விலகியதை தொடர்ந்து குறித்த பதவிக்கு ஜயந்த லால் ரத்னசேகர ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசிய மட்டத்திற்கு தெரிவாகி சாதனை படைத்த சம்மாந்துறை வலயத்தின் ஐந்து புத்தாக்கங்கள்







(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்பு போட்டியில் சம்மாந்துறை வலய பாடசாலைகளின் 5 புத்தாக்கங்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளன. முதலிடத்தை றாணமடு இந்து கல்லூரி மற்றும் தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தை அல் மர்ஜான் மகளிர் கல்லூரி மற்றும் மல்வத்தை விபுலானந்தா மத்திய கல்லூரி மூன்றாவது இடத்தை அல் அமீர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பெற்றுக் கொண்டன.

இவர்களுக்கான சான்றிதழ்களை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் வழங்கி வைத்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் சாதனைக்குரிய மாணவர்கள் கற்பித்த ஆசிரியர்கள் பெற்றோர்கள் பயிற்சியளித்த ஆசிரிய ஆலோசகர் ரிஎல்.றைஸ்டீன் உள்ளிட்டோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

முன்னதாக சம்மாந்துறை வலய மட்டத்தில் 2024.09.12ல் நடாத்தப்பட்ட வலய மட்ட புத்தாக்க போட்டியில் பத்து புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்ட புத்தாக்க போட்டிக்கு அனுப்பி வைக்கப் பட்டது . இம் மாகாண மட்ட போட்டி கடந்த வாரம் மட்டக்களப்பு சென் மைக்கேல் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் இரண்டு முதலிடங்களையும், இரண்டு இரண்டாம் இடங்களையும் ,ஒரு மூன்றாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை ஐந்து மெரிட் இடங்களையும் பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர் என்று விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ரிஎல்.றைஸ்டீன் தெரிவித்தார்.

இதற்காக உழைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அவர் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார் .



# பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆசிரியை பாராட்டி கௌரவிப்பு









(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடியில் இலங்கை விவசாய சேவைக்கு தெரிவாகிய பாடசாலையில் தொழினுட்ப பிரிவில் கற்பித்த ஆசிரியை இ.சுகன்யா பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர்கள்,உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோஸ்தர்களும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2024இல் வெளியிடப்பெற்றது.